**CC.No. 234/2020 (JM.No.II, DHARMAPURI)**

**28.04.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரிகள் ஆஜர்)**

**PW–8 : திரு.மாரிமுத்து, த/பெ.ராஜி**

**முதல் விசாரணை**

நான் தருமபுரி நகர கூட்டுறவு வங்கியில் இரவு காவலராக பணிபுரிந்து கடந்த 2021ஆம் வருடம் ஓய்வு பெற்று தற்போது ஏலகிரியில் குடியிருந்து வருகிறேன். நான் மேற்படி நகர கூட்டுறவு வங்கியில் 2000ம் வருடம் இரவு காவலராக இரவு 08.00 மணி முதல் மறுநாள் காலை 09.00 மணி வரை பணிபுரிந்து வந்தேன். நான் இரவு காவலராக பணிபுரிந்த போது மேற்படி கூட்டுறவு வங்கியில் கம்யூட்டர் ஆப்ரேட்டராக இருந்த தங்கவேல் என்பவர் மாதத்தில் மூன்று நாட்கள் மாலை 06.00 மணிக்கு மேல் வந்து மேனேஜர் அறையிலுள்ள கம்யூட்டரில் வேலை பார்த்து வந்தார். பொது மேலாளர் சண்முகம், மேனேஜர் ரவிச்சந்திரன் ஆகியோரும் மாலை 06.00 மணிக்கு மேல் வந்து வேலை பார்த்து வந்தார்கள். மேற்படி அனைவரும் மாலை 06.00 மணியிலிருந்து இரவு 10.00 மணி வரை வேலை பார்ப்பார்கள். 2003ம் வருடம் மேறபடி நகர கூட்டுறவு வங்கியில் 3 கோடி மோசடி நடந்ததாக மேல் அதிகாரிகள் தெரிவித்தார்கள். மேற்படி மோசடியில் பொது மேலாளர் சண்முகம், கம்யூட்டர் ஆப்ரேட்டர் தங்கவேல், மேனேஜர் ரவிசசந்திரன், காசாளர் சண்முகம், ராஜராம், புகழேந்தி ஆகியோர்கள் சம்மந்தமப்பட்டதாக தெரிவித்தார்கள். இது சம்மந்தமாக போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை** – எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.04.28 17:43:03 +0530

CC.No. 234/2020 (JM.No.II, DHARMAPURI)

28.04.2026

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரிகள் ஆஜர்)**

**PW–9 : திருமதி.அமிர்தம், க/பெ.குணசேகரன்**

**முதல் விசாரணை**

நான் தருமபுரி நகர கூட்டுறவு வங்கியில் உதவி மேலாளராக பணிபுரிந்து கடந்த 2023ஆம் வருடம் ஓய்வு பெற்று தற்போது தருமபுரியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என்னுடன் பணிபுரிந்தவர்கள் தான். நான் மேற்படி நகர கூட்டுறவு வங்கியில் 01.10.1993ன் உதவியராளக பணியில் சேர்ந்து பணிபுரிந்து வந்தேன். கடந்த 2000ம் வருடம் மேலாளர் உத்தரவின் செல்வம் என்பவருக்கு மேற்படி கூட்டுறவு வங்கியில் சேமிப்பு கணக்கு துவக்க விண்ணப்பம் எழுதி கையெழுத்தியிட்டு தொடங்கி வைத்தேன். அந்த விண்ணப்பத்தின் ஆரம்பத்தி கொடுத்தவர் என்ற இடத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த விண்ணப்பம் **அ.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்பிறகு 2004ம் வருடம் கம்யூட்டர் ஆப்ரேட்டராக இருந்த தங்கவேல் என்பவர் மோசடி செய்ததாக தெரிவித்தார்கள். மேற்படி தங்கவேலின் தம்பி செல்வத்தின் சேமிப்பு கணக்கிலும், தங்கவேலின் நடப்பு கணக்கிலும் மோசடி செய்ததாக தெரிய வந்ததது. மேற்படி வங்கியில் 2.83 கோடி மோசடி நடந்ததாக சொன்னார்கள். மேற்படி மோசடியில் தங்கவேலுயுடன் மேனேஜர் ரவிச்சந்திரன், புகழேந்தி, ராஜராம், உதவியாளர் மோகன் ராஜ், சண்முகம் அவர்களுடன் சிலரும் ஈடுபட்டதாக தெரிய வந்தது. இது சம்மந்தமாக போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை** – எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.04.28 17:43:10 +0530